

மினி
லயன்
கானக மோசடி!
ரூ. 1/-
முழுநீளச் சித்திரக்கதை!

ஹீ! ஹீ!!




ஹீ! ஹீ!!





சூப்பர் பைலட் டைகர் தோன்றும்
கானக மோசடி!
அடர்ந்த கானகப் பகுதியிலிருந்த பாழடைந்த பாங்ளா கோட்டையருகே தரையிறங்க முயன்ற இரு விசேஷ ரக விமானங்களை, கீழே இருந்த மூன்று உருவங்கள் சந்தேகக் கண்களோடு உறுத்துப்பார்த்துக்கொண்டிருந்தன...


அங்கே வந்துகொண்டிருக்கும் எதிரிகளை துரத்தியடிக்க வேண்டும்!
வானம் உன்னுடைய வரம்பிற்குட்பட்டதாகையால நீதானஏதாவது உபாயத்தை கையாள வேண்டும்!
மறுகணம்—






எங்கிருந்தோ வெளிப்பட்ட ராட்சஸ விஷ வண்டுகள் புயலென சீறிக் கொண்டு வந்தன...
இலட்சோபலட்சம் வண்டுகள்... கரிய மேகம்போல் வந்து விமானங்களை சூழ்ந்து கொண்டன.


என்ன விபரீதம் இது...?
எங்கேயிருந்து வந்தன
இந்தராட்சஸ வண்டுகள்?


இந்த எமன்களிடமிருந்து எப்படி
தப்பிப்பது என்று தெரிய
வில்லையே, **பாஸ்!**




குழுவின் தலைவர் டைகரிட
மிருந்து தெளிவாக வந்தது
ஆலோசனை...
விமானத்தை மேலே அதிக
உயரத்துக்கு கொண்டுபோ
வில்சன — சீக்கிரம்!



விமானங்கள் இரண்டும் ஜிவ்
வென மேலே எழும்பின
உயரே நிலவிய மாறுபட்ட
சீதோஷ்ணநிலை வண்டு
களுக்கு ஏற்றதாக இல்லாத
தால் அனைத்தும் செத்து
விழுந்தன...! அதன்பின்
அந்த விமானங்கள் தரை
யிறங்க தடையேதும் இருக்க
வில்லை!


வண்டுகளின் தாக்குதல் தற்செயலான அசம்பாவிதம் என்று நினைக்கிறீர்களா... புரபஸர்?
ஆம் என்றோ, இல்லை என்றோ உறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை!



கோட்டையினுள் ஒருவேளை நமக்கு விளக்கம் கிடைக்கலாம்!





நீங்களும் வில்சனும் கோட்டைக்குள் செல்ல வசதி எப்படி என்று போய் ஆராய்ந்து வாருங்கள் நாங்கள் இங்கேமுகாமை அமைக்கும் பணியில் ஈடுபடுகிறோம்!



அதையடுத்து—
எதற்கும் விழிப் போடு இருங்கள்!
இதையேதான் நானும் உங்களிடம் சொல்ல விரும்பினேன்!


சுற்றிலும், எந்த நடமாட்டமும் இல்லாமல் அமைதியாக இருக்கிறது!


அதே வேளையில்... அங்கே—
என் யுக்தி பலிக்கவில்லை... தரையை தொட்டுவிட்ட அவர்களை சமாளிக்கும் பொறுப்புஇனி உன்னுடையது!





புதுமையானதொரு கருவியினை பயன்படுத்தினான் இன்னொரு ஆதிவாசி...


மறுகணம்— எங்கிருந்தோ ஓடி வந்தது ஒரு காட்டுயானைக கூட்டம்!



ஜீப்பை எதிர்கொண்டு வெறி யோடு ஓடிவந்தன—
ஐயையோ...யானைக் கூட்டம்!






மிரண்டுபோனவில்சன் சட்டென்று ஜீப்பை திருப்பி உச்ச வேகத்தில் செலுத்தினான்.


மறுநிமிடம்—
ஹாவ்... அங்கேபார்—



மற்றொரு யானைக் கூட்டம்
விமானங்களை குறி வைத்து
முன்னேறிக் கொண்டிருந்தது
ஆபத்து... விமானத்தில்
ஏறுங்கள் — சீக்கிரம்!
கணமும் தாமதியாமல் விமானத்தை
மேலே ஏற்றிய டைகர் யானைகளின்
தலைக்கு சற்று மேலே பறந்தார்...
கீழே நிற்கும் விமானத்தை
இவை தாக்கி நாசம் செய்து
விட அனுமதிக்கலாகாது!
அந்த விலங்குகளின் மேல் மோதப்போவது
போல் பாய்ச்சல் காட்டினர்—



டைகரின் யுக்தி பலித்தது...
யானைகள் வெருண்டு
கலைந்தோடின—


ஆனால்-
ஐயோ... இந்தப் பக்க-
மிருந்தும் யானைகள்
வருகின்றன!


சமயோசிதமாக விமானத்தை
ஜீப்பின் நேர் மேலே தாழ
கொண்டு சென்றார் டைகர்-




தலைவரின் திட்டத்தை சட்டென்று புரிந்துகொண்ட
வில்சன் ஜீப்பை நிறுத்தி பாய்ந்து எழுந்து
உயரே தாவினான்-
புரபஸர்... நீங்களும்
தான்- சீக்கிரம்!



மயிரிழையில் தப்பிவிட்டோம்-
ஜீப்புக்கு நேர்ந்த கதியைப்
பாருங்கள்!


நாலா திசைகளிலும் பரவலாக வெடிகளை வீசி யானைகளை அச்சுறுத்தினர்... கலவரமடைந்த யானைகள் கலைந்து சிதறி ஓட்டம் பிடித்தன—
டும்!
டும்!


முதலில் ராட்சஸ விஷவண்டு-கள்... இப்போது மதம் பிடித்த காட்டு யானைகள்!




திட்டமிட்ட தாக்குதல்கள்- பின்னணி-யிலிருந்து கொண்டு யாரோ சதி செய்கிறார்கள்!



அப்போது—
அதோ... அங்கே- மூன்று விஷ-மிகள் ஓட்டம் பிடிக்கிறார்கள்... பாருங்கள்!


அந்த கோட்டையினுள் வாழும் பழங்குடியினருக்கு சில அபூர்வ ஆற்றல்கள் இருப்பதாக கேள்விப்பட்டிருக்கிறேன்... வண்டுகளையும், யானைகளையும் நம்மீது ஏவி விட்டவர்கள் அவர்களாகத்தானிருக்கும்!


நம்மை எதிரிகள் என்று எண்ணிவிட்டார்கள் போலும்!





உண்மையில் அவர்கள் அரசாங்க அனுமதியுடன் தான் பங்களா பழங்குடியினரின் வாழ்க்கைமுறையை ஆராய அங்கே வந்திருந்தனர்...


அந்தக் காலத்தில் பாஸ்ஸி நாட்டு மக்களின் முக்கிய வியாபாரத் தொழில் என்னவென்று தெரியுமா- தங்கம்!


தங்கம் என்ற வார்த்தையை கேட்டதும் புரபஸரின் உதவியாளர்கள் கண்களில் பேராசை மின்னலடித்தது...
அதையடுத்து—
இனி நாம் தரை இறங்கலாம்!




இன்றிரவே நாம் கோட்டையினுள் நுழைவோம்!
பாழடைந்து வந்த அந்த புராதனக் கோட்டையை அழிவிலிருந்து காப்பாற்றும் புது யுக்தி ஒன்றை நடைமுறையில் சோதனை செய்து பார்க்க எண்ணியிருந்தார் புரபஸர்.
நம்முடைய நல்ல நோக்கத்தை எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்ள மாட்டார்களா அந்த பழங்குடியினர்?


புரிந்து கொள்ளாமல் என்ன? ஒரு காலத்தில் இவர்களுடைய கலாச்சாரமும் வாழ்க்கை நிலை யும் மிகச் சிறந்த நிலையில் இருந்திருக்கிறது!



ஆனால் ஆதிவாசிகளுக்கோ அன்னியர்கள் மீது அளவில்லாத அவநம்பிக்கை—
ஏய் திதம்பா... தண்ணீருக்கு அதிபதியான நீ- வந்திருக்கும் வெள்ளையர்களை விரட்டியடிக்க உன் அற்புத ஆற்றலை பயன்படுத்து!




எங்களைப் போலவே நீயும் தோற்று விட்டால் நம் பெருந்தலைவரின் உதவியை உடனே நாடுவதைத்தவிர வேறு வழியில்லை!


இருள் கவிழ்ந்ததும்...
கவலைப் படாமல் சென்று வாருங்கள்... விழிப்போடு காவல் காத்து நிற்பேன்!
எச்சரிக்கையாக இரு... தூங்கிவிடாதே!


ஒரு சிறு சுண்டெலி வந்தால் கூட என் கழுகுப் பார்வையிலிருந்து தப்பமுடியாது!



?
க்ராக்!
ம்ய்யா
ம்ய்யா


அந்த மூன்று ஆதிவாசி
களும் கூடாரத்தினுள்
எப்படி வந்தனர்?




அகப்பட்டதை சுருட்டிக்
கொண்டு போகலாம்
என்று வந்திருப்பார்கள்-
விடுவேனா?


ஆ- ஐயோ...
கழுதைப் புலிகள்!


சப்தம் கேட்டுத் திரும்பிய மூன்றும் ஒரே பாய்ச்சலாக பாய்ந்தன...


அதே வேளையில்— டைகரும், புரபஸரும் பாழடைந்த கோட்டையின் அடிவாரத்தை சென்றடைந்தனர்...
மிக மோசமாக சிதிலமடைந்து இருக்கிறது!
நாம் செல்லவேண்டிய வழி கூட தெளிவாக தெரியவில்லை!




சற்றுத் தொலைவில் லேசான சலசலப்பு கேட்டது...
அதோ மதில்மீது ஒரு மனித உருவம்!
அவனைப் பின்தொடர்ந்தால் கோட்டையினுள் சென்றுவிட முடியும் என நினைக்கிறேன்!
சரி— நடங்கள்!
அது ஒரு குச்சி என்பது ஆராய்ச்சி குழுவினருக்குத் தெரியாது...


விரைவாக ...ருங்கள்— இல்லையேல் அவன் பார்வையிலிருந்து தப்பிவிடக்கூடும்!
புதிரான இடமாக இருக்கிறது!
அந்த ஆசாமியும் மாயமாக மறைந்துபோய்விட்டான்!




திரும்பிச் செல்லவும் முடியாதவாறு சட்—டென்று கீழே இறங்கிய கதவுஒன்று அவர்கள் நுழைந்த வாயிலை அடைத்தது...
கதவை தாளிட்டு அவர்—களை சிறைப்படுத்தியவன்—நிதம்பா!
அகப்பட்டுக் கொண்டார்கள்— வகையாக!
?!
?
குபுக்! குபுக்!



ஊற்றடித்துப் பெருகும் தண்ணீரில் அமிழ்ந்து சாகப்போகிறீர்கள்—அனுமதியின்றி பேரரசர் தேலோமாவின் சாம்ராஜ்யத்தினுள் அடி எடுத்து வைத்த குற்றத்திற்காக!
புரபஸர்— அவன் என்ன சொல்கிறான் என்று உங்களுக்காவது புரிந்ததா?
புரியாமல் என்ன— இவர்கள் மொழி நன்றாகவே தெரியும் எனக்கு!
விஷயத்தை புரபஸர் மொழிபெயர்த்துச் சொன்னவுடன் உதவியாளர்களில் ஒருவன் கோபாவேசமாக துப்பாக்கியை உருவினான்-
உயிரை விடுமுன் உங்களையும் தீர்த்துக் கட்டாமல் விடப்போவதில்லை நான்!






பலாத்காரத்துக்கு இங்கே இடமே கிடையாது. தங்களுடைய பூமியையும் அரிய சொத்துக்களையும் பாதுகாக்கும் பொருட்டு இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கும் அவர்கள் செயலில் தவறேது!
சத்!
இப்போது ஒன்றும் மோசம் போய் விடவில்லை!
டைகர் ஓர் உபாயத்தை கையாள திட்டமிட்டார். அதை மற்ற சகாக்களிடம் இரகசியமாக எடுத்துரைத்தார்.


அதையடுத்து வானத்தை நோக்கி துப்பாக்கியை முழக்கினர் புரபஸர்...
அஹ்!







உதவிக்கு வரும்போது அவன் விமானத் தில் வந்தால் வசதியாக இருக்கும்!
டுமீல்! டுமீல்!


வில்சனின் செவியை எட்டும் வகையில் தொடர்ந்து துப்பாக்கியை முழக்க வேண்டும்!


டைகரின் எதிர்பார்ப்பு வீண்போக வில்லை!
திடுக்கிட்டுப் போன வில்சன் திகைத்தாள்!
டுமீல்! டுமீல்! டுமீல்!
சரமாரியாக தோட்டாக்கள் முழங்குகின்றன... அங்கு ஏதோ ஆபத்து!


36
விரைந்து சென்றடைய விமானத்தில் போகப் போகிறேன்!
துப்பாக்கி ஓசை வந்த இடத்தை சென்றடைந்த வில்சன் தன் நண்பர்கள் அகழி ஒன்றில் கரையேற வகையின்றி நீரில் தத்தளிப்பதைக் கண்டான்...
அதோ... கயிற்றை தொங்கவிடுகிருன் வில்சன்!
கயிற்றின் மூலம் மேலே ஏறி ஒவ்வொருவராக விமானத்தினுள் சென்றனர்...
இந்த மூன்று ஆதிவாசிகளை-யும் முகாமிற்கு தூக்கிச் செல்லவேண்டும்!
அதையடுத்து...
மெள்ள... கவனமாக தூக்கு!


பின்னர்... முகாமில்—
இதோ... விழித் தெழுகிருர்கள்!
பொறு... முதலில் நான் அவர்களோடு பேசிப் பார்க்கிறேன்!
நாங்கள் எதிரிகள் அல்ல— எங்களைக்கண்டு நீங்கள் மிரட்சியடையத் தேவையில்லை! உங்களுக்கு உதவி புரியவே வந்திருக்கிறோம்!
தாங்கள் அங்கே வந்த நோக்கத்தை நிதானமாக தெளிவாக எடுத்துரைத்-தார் புரபஸர்...
அவர்களுடைய கலாச்சாரத்-தை தான் பெரிதும் போற்று-வதாகச் சொன்னார்...
37


உங்களுடைய பெருமை மிக்க பண்டைய கலாச்-சாரத்தை எங்கள் நாட்டவருக்கு தெரியப்படுத்துவதுதான் எங்கள் வருகையின் நோக்கம்... வேறு எந்த தீய எண்ணமும் கிடையாது!
புரிந்து கொண்டோம்! உங்களை நம்புகிறோம்! உங்களு-டைய முயற்சிக்கு எங்களுடை முழு ஒத்துழைப்பும், ஆதரவும் உண்டு!
ஆதிவாசிகளின் கண்களில் பெருமிதம் மிளிர்ந்தது...




இந்தக் கோட்டையினுள் நீங்கள் மட்டும்தான் வசிக்கிறீர்களா?
இல்லை... மொத்தம் ஐம்பது பேர். இருக்கிறோம். ஆனால் மற்றவர்கள் சாதாரணமாக வெளியே வருவதில்லை!
மீண்டும் மறுநாள் சந்திப்-பதென்ற ஏற்பாட்டோடு அவர்கள் விடைபெற்றுச் சென்றனர்...



மறுநாள் அவர்கள் கோட்டையினுள் சென்றதைத் தொடர்ந்து...
எங்களுடைய கலாச்சாரத்திற்கு இன்னமும் பெருமை சேர்க்கும் தேவன் தேபோமாவின் ஆலயம் இதோ!
புரபஸரின் இரு உதவியாளர்களின் பார்வையிலும் கபடம் இருந்தது...
விலை மதிக்க முடியாத அரிய பொக்கிஷங்கள்- பல நூறு மில்லியன்கள் பெறுமானம் இருக்கும்!
ஆகா... தங்கம்- அத்தனையும் சுத்த தங்கம்!








அன்று முழுவதும் புரபஸர் குறிப்புகள் எழுதினர்...
படம் எடுத்தார் வரைந்தார்...
...அளந்தார்... ஆராய்ந்தார்...


ஆனால் அவருடைய உதவியாளர்களின் கவனமோ பணியில் இருக்கவில்லை... திரும்பிய திசையெல்லாம் பளபளத்த தங்கம் அவர்களை மயக்கியது...
இருள் சூழத்தொடங்கியது...
எப்படியாவது முடிந்த அளவுக்கு கவர்ந்து கொண்டு போய்விடவேண்டும்!




அன்றிரவு முகாமை விட்டு மெள்ள நழுவிய இரு உருவங்கள், கோட்டையை நோக்கி விரைந்தன...
அதற்கு ஒரு அருமையான திட்டம் என்னிடம் இருக்-கிறது... இப்படி வா- சொல்கிறேன்!
வானில் பவனி வந்துகொண்டிருந்த பிறைநிலா மிதமான ஒளியை உமிழ்ந்துகொண்டிருந்தது...
ஸ்ஸ்ஸ்...


வீரியம் மிக்க மயக்க வாயுவை பிரயோகித்து ஆதிவாசிகள் அனைவரையும் நீண்ட தூக்கத்தில் ஆழ்த்தினர்—


இனி சூப்பர் பைலட் டைகரையும், மதிப்பிற்குரிய புரபஸரையும் கவனிப்போம்—





சிறு ஓசையும் பிறரது கவனத்தை ஈர்த்துவிடலாம்... ஜாக்கிரதை!
வில்சனின் உதவி அவர்களுக்கு தேவைப்பட்டது—
ஸ்ஸ்ஸ்..
அடேய்—கைகளை தூக்கு—நாங்கள் சொல்லப்போவதை கவனமாக கேட்டுக் கொள்!


டைகரையும், புரபஸரையும், அங்கே உள்ள ஆதிவாசிகள் அனைவரையும், நீண்ட தூக்கத்தில் ஆழ்த்தியிருக்கிறோம். கோவிலில் இருக்கும் தங்கத்தை கடத்த எங்களோடு ஒத்துழைக்கா விட்டால்—


துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்ட வில்சனுக்கு, ஒத்துப் போவதை தவிர வேறு வழி இருக்கவில்லை—



அனைத்தும் மின்னல் வேகத்தில் நடந்தது-


இறுதியில், தேலோமா சாம்ராஜ்யத்தின் சின்னமான, தங்க ஸ்தூபியும் விமானத்திற்கு தூக்கிச் செல்லப் பட்டது—


திட்டமிட்டதைவிட சற்று கூடுதல் நேரம் செலவழிக்கப்பட்டதால்—மயக்கத்தில் ஆழ்ந்திருந்த ஆதிவாசிகள் விழித்தெழத் தொடங்கினர்.
அப்பப்பா—என்ன தூக்கம்! சீக்கிரம் எழுந்திரு-கோவிலுக்குச் செல்ல நேரமாகி விட்டது!
மூன்று குருமார்களும் இரகசிய பாதை வழியே கோவிலுக்குச் சென்றனர்—




அங்கே அவர்கள் கண்ட காட்சி-
ஐயோ—மோசம் போனோம்—வெள்ளையர்கள் நம்பிக்கைத் துரோகம் இழைத்து விட்டார்கள்!
இதற்கிடையே, விழித்துக் கொண்டுவிட்ட டைகரும், புரபஸரும் குழப்பத்தோடு தடுமாறினார்கள்.
உங்களுடைய உதவியாளர்களையும் வில்சனையும் விமானத்தோடு காணவில்லை—புரபஸர்!
கோவிலில் பெருமளவில் தங்கம் இருப்பதை பார்த்த உங்களுடைய உதவியாளர்களின் கண்களில் பேராசை
ர்வதை கவனித்தேன்!


புரபஸருக்கு புரிந்து விட்டது-
சேச்சே—எத்தனை ஈனத்தனமான செயல் நம்பிக்கைத் துரோகம்!


விமானம் நெருங்கி வரும் சப்தம் அவர்களுடைய கவனத்தை ஈர்ந்தது-




சட்டென்று, ஏதோ ஒரு விசித்திரமான ஒலியை எழுப்பி ஓர்கள் இரு குருமார்கள்-



அத்தா-


ஆதிவாசிகளும் அந்த காட்சியை கண்டு கொதிப்படைந்தனர்-
அவர்களை, எப்படி-யாவது தடுத்து நிறுத்த வேண்டும்!


அதன் விளைவாக—எங்கிருந்
தோ நூற்றுக்கணக்கான
கழுகுகள் அங்கே
பறந்தோடி
வந்தன-
விமானத்தை சூழ்ந்து
கொண்டு தாக்கத்
தொடங்கின—




அதே வேளையில்...
இந்த கழுகுகளால் அந்த
விமானத்தை நிறுத்திவிட
முடியாது— நான்தான்
முயற்சிக்கவேண்டும்!
ஆனால் கீழே நிற்கும் விமானத்தை
சென்றடைய முடியாதவாறு விபரீதம்
ஒன்று உருப்பெற்றது...
ஐயோ...
நாகப்
பாம்புகள்!


புரபஸர்... உங்கள் வசமுள்ள மருந்து தெளிக்கும் கருவியை எடுத்து வாருங்கள்!







முதல் முறையாக அவரும், அவருடைய சகாவான வில்சனும் எதிரெதிர் அணியில்...
வுரும்ம்....
இரண்டாவது விமானத்தைக் கிளப்பினார் டைகர்...
விமானத்தை சுழற்றி, நிறைய கழுகுகளை வீழ்த்தினான் வில்சன்...


டைகர் நம்மை மடக்க வருகிறன்!
ஒழித்துக் கட்டி விடலாம்!
கேட்டாயல்லவா...அவனுடைய விமானத்தோடு போய்மோது!
அது தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது!




டைகர் ஒரு சூப்பர் பைலட்! சாகஸ வீரர்! எந்த விமானமும் அவர் சொற்படி கேட்கும்!
சொன்னதைச் செய்!
அத்தோடு, நம் விமானத்தில் கூடுதல் பளு உள்ளது! இஷ்டத்திற்கு வேகமாக ஓட்டுவது கடினம்– ஆபத்தும்கூட! டைகரின் பிடியிலிருந்து நாம் தப்பிக்கும் வாய்ப்பேயில்லை!



அப்படியொரு கில்-
லாடியா அவன்?
அதையும் தான்
பார்த்துவிடலாம்!



இந்த டெலஸ்கோப்
துப்பாக்கியால் கச்சிதமாக
குறிவைத்து...





...இரண்டு மூன்று
தோட்டாக்களை அனுப்பி
கெலிக்கப் போகிறேன்!





அவன் நுட்பமாக குறிவைத்து விசையை இழுக்க முனைந்த கணத்தில்...
ஆ...வ்வ்!
என் பாஸை குறி வைக்கிறாயா? நானொருத்தன் இங்கிருப்பதை மறந்துவிட்டாயா மடையா!
60



வில்சன் சட்டென்று விமானத்தை சாய்க்கவே உள்ளிருந்த இருவரும் தடுமாறி சாய்ந்தனர்...
விமானத்தை சீராக ஓட்டு... இல்லையேல் முதலில் உன்னைத்தான் குறிவைப்பேன்!
என்னைக் கொன்றுவிட்டால் இந்த விமானத்தை யார் ஓட்டுவதாம்... யோசித்துப் பார்த்தாயா?
61


ஆ...மா...ம்!
கையிலிருக்கும் டெலஸ்கோபிக் துப்பாக்கியை தூர எறிந்துவிடச் சொல் உன் தோழனிடம்!


இல்லையேல் விமானத்தை இப்படியே கீழே கொண்டுபோய் தரையோடு மோதிவிடுவேன்... ஒட்டு மொத்தமாக சொர்க்கத்திற்குப் போய்விடலாம்!




ம்—சீக்கிரம்- உயரம் வேகமாக குறைந்து கொண்டு வருகிறது. பார்—எண்பது மீட்டர் எழுபது—அறுபது-


வேண்டாம்— வேண்டாம்— நீ சொல்கிறபடியே செய்கிறோம்!



அடுத்த விமானத்திலிருந்தவாறு, இந்த நாட
கத்தை பார்த்து இரசித்துக் கொண்டிருந்த
டைகரும், புரபஸரும், துப்பாக்கி வெளியே
எகிறி விழுந்ததை பார்த்து சிரித்தார்கள்—
வில்சன் மகா சாமர்த்தியசாலி—
புரபஸர்! தனி ஒரு நபராகவே
நிலைமையை சமாளித்து
விட்டான் பார்த்தீர்களா?



நாம் முதலில் தரை
யிறங்கி அந்த இரண்டு
துரோகிகளுக்கும் உ'ரிய
வரவேற்புக் கொடுப்போம்!
காலில் விழுந்து
மன்னிப்புக்
கேளுங்களடா—
பேராசை
பிண்டங்களா!




லயன் புக் ஹவுஸ், நிறுவனத்தின் சார்பாக ''மினி லயன்'' ஐ
வெளியிடுபவரும், ஆசிரியரும் : S விஜயன். தபால் முகவரி :
லயன் புக் ஹவுஸ், த. பெ. 55, சிவகாசி-626123.
போன்: 21159. வெளியீடு எண்: 4.

ஒரு சூப்பர் நியூஸ்!



அடுத்த மாதம்
முதல்....

ஜூனியர் லயன் &
மினி லயன்

இணைந்து ஒரே
காமிக்ஸாக வெளி-
வருகிறது!

புதிய பகுதிகள்!

துப்பறியும் கதைகள்!

விலை ரூ. 2-50